# வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி
# ZONAL EDUCATION OFFICE, VADAMARADCHY


## செயலட்டை – தவணை 1

**பாடம்: பரதநாட்டியம்** **தரம்: 11**

1) தாய் சேய் உறவினை வெளிப்படுத்தும் பாவம் எவ்வாறு அழைக்கப்படும்?
2) குருவிற்கும் சிஷ்யனுக்கும் இடையே உள்ள தொடர்பை வெளிப்படுத்தும் பாவம் எவ்வாறு அழைக்கப்படும்?
3) அடர்ந்த காடு ஒன்றினுள் நீர் தனியாக செல்கையில் உமக்கு ஏற்பட்ட உணர்வு எது?
4) ‘பாம்பு’ இதனை அபிநயிக்க பயன்படுத்தும் கஸ்தம் எது?
5) ‘வித்யுதர்த்தே’ இதன் கருத்து யாது?
6) மின்னல் இதனை அபிநயிக்க பயன்படுத்தும் கஸ்தம் எது?
7) 2004ம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் யாது?
8) கடல் அலையினை அபிநயிக்க பயன்படுத்தும் கஸ்தம் எது?
9) ரஸங்கள் எத்தனை?
10) ஸ்வரங்கள் கோர்வைகளால் அமைக்கப்பட்ட உருப்படி எது?
11) இதன் மறு பெயர்கள் கூறுக?
12) இவ் உருப்படியானது எந்த வகையைச் சார்ந்தது?
13) நீர் கற்ற ஜதீஸ்வரம் அமைந்த ராகம் யாது?
14) இவ் உருப்படி அமைந்த தாளம் யாது?
15) தீர்மானம் ஆரம்பத்தில் இடம்பெறும் நீர் கற்ற உருப்படி யாது?
16) கோர்வைகளின் இறுதியில் இடம்பெறும் அடவுகளை எவ்வாறு அழைப்பர் ?
17) மகுட அடவுகள் எவை?
18) நீர் கற்ற உருப்படிகளில் மெய்யடவுகள் இடம்பெறும் உருப்படி எது?
19) இவ் உருப்படியில் மெய்யடவுகள் எப்போது ஆடப்படுகின்றன?
20) பரதநாட்டியத்தின் உட்பிரிவுகள் எவை?
21) பரதநாட்டிய உருப்படிகளில் நிருத்த உருப்படிகள் எவை?
22) ஒரு நாட்டியக் கச்சேரியில் வணக்கம் செலுத்தும் முகமாக முதலாவதாக ஆடப்படும் உருப்படி எது?
23) அலர் எனும் சொல்லின் தமிழ் கருத்து யாது?
24) அலாரிப்பு யாருக்கு வணக்கம் செலுத்தும் முகமாக ஆடப்படுகிறது?
25) நீர் கற்ற அலாரிப்பின் ராகம், தாளம் யாது?
26) அலாரிப்பில் இடம்பெறும் அட்டமியின் அசைவு என்ன?
27) அலாரிப்பில் தீர்மானம் எங்கு இடம்பெறுகிறது?
28) அலாரிப்பில் எத்தனையாவது தத் தெய் தாஹா அடவு ஆடப்படுகிறது?
29) ஸ்வரங்களைத் தாதுவாகவும் மாதுவாகவும் கொண்ட உருப்படி எது?
30) ஜதீஸ்வரத்தின் பகுதிகள் அல்லது கிரமங்கள் எவை?

31) ஜதீஸ்வரங்களை இயற்றிய பெரியார்கள் யார் ?

32) பரதநாட்டிய உருப்படிகளில் முதன் முதலில் பாவத்தை வெளிப்படுத்தும் உருப்படி எது?

33) நீர் கற்ற சப்தம் அமைந்த தாளம், இராகம் யாது?

34) சப்தம் யார் மீது இயற்றி அமைக்கப்பட்டது?

35) சப்தத்தில் வெளிப்படுத்தப்படும் ரஸங்கள் எவை?

36) பரதநாட்டிய உருப்படியில் இதயம் போன்ற உருப்படி எது?

37) நடனத்திற்கென அமைக்கப்பட்ட வர்ணம் எது?

38) வர்ணத்தின் இரு பகுதிகளும் எவை?

39) பல்லவி, அனுபல்லவி, முத்தாய்ஸ்வரங்களை கொண்ட பகுதி எவ்வாறு அழைக்கப்படும் ?

40) சரணம், சரணஸ்வரங்களை கொண்டபகுதி எவ்வாறு அழைக்கப்படும் ?

41) பதவர்ணம் வேறு எவ்வாறு அழைக்கப்படும் ?

42) நாயகன் நாயகி பாவத்துடன் ஆடப்படும் உருப்படி எது?

43) பதத்தில் வெளிப்படுத்தப்படும் ரஸம் எது?

44) பதத்தின் அங்கங்கள் எவை?

45) தெலுங்குப் பதங்களின் நாயகன் யார் ?

46) பெரும்பாலான தமிழ்ப்பதங்களின் நாயகன் யார் ?

47) பரதநாட்டியக் கச்சேரியில் இறுதியில் விறுவிறுப்புடன் ஆடப்படும் உருப்படி எது?

48) திரனா, நாத்ருதீம், தீம்தீம், என்ற கருத்தற்ற சொற்களை மையமாக கொண்ட உருப்படி எது?

49) சுலோகம் என்பதனை தமிழில் எவ்வாறு கூறுவர் ?

50) தாளத்தில் பாடாது கவிதைகளை இராகமாக நீட்டிப்பாடுவதை தெலுங்கில் எவ்வாறு கூறுவர் ?

51) ஜய, ஜய, மங்களம் எனும் சொற்களை கொண்டு ஆடும் உருப்படி எது?

52) இறைவனை புகழ்ந்து பாடுவதாக அமைந்த உருப்படி எது?

53) கீர்த்தனையின் சாகித்தியம் எவ்வாறு அமைந்திருக்கும் ?

54) ஜெயதேவரால் இயற்றப்பட்ட உருப்படி எது?

55) இவ் உருப்படியை வேறு எவ்வாறு அழைப்பர் ?

56) அஷ்டபதி எனப் பெயர் ஏன் வந்தது?

57) கீதகோவிந்தத்தில் எதைப்பற்றி கூறப்படுகின்றது?

58) ஜீவாத்மா, பரமாத்மா, ஊடலை வெளிப்படுத்தும் உருப்படி எது?

59) கர்நாடக இசை அரங்குகளில் நிகழ்ச்சியின் இறுதியில் பாடும் உருப்படி எது?

60) நாயகன், நாயகி, தோழி ஆகிய மூன்றுபாத்திரங்கள் அடங்கியதாக அமைந்த நாட்டிய உருப்படி எது?

61) சிவபெருமான் தனக்குமட்டும் தனியாக நடனம்புரிந்து காட்டவேண்டும் என்று கேட்டவர் யார் ?

62) பிரதோஷ வேளையில் சிவபெருமான் ஆடிய நடனம் எது?

63) இந்திரன், குபேரன், வாயு, அக்கினி போன்றவர்கள் மீது எழுதப்பட்ட கௌத்துவம் எது?

64) புஸ்பாஞ்சலி என்பதை பாகவதர் மரபில் எவ்வாறு அழைப்பர் ?
65) மல்லாரி பாடப்படும் இராகம் யாது?
66) விழாக்காலங்களில் பாடப்பட்டுவந்த உருப்படிகள் எவை?
67) பரதமுனிவரின் நடனகுரு யார் ?
68) கரணங்கள் எத்தனை?
69) பெண்களால் ஆடப்படும் நடனம் எது?
70) ஆண்களால் அழுத்தத்துடன் ஆடப்படும் நடனம் எது?
71) படைத்தல் தொழிலைக் குறிக்கும் தாண்டவம் எது?
72) கௌரி தாண்டவம் ஆடப்படும் இடம் எது?
73) சந்தியா தாண்டவம் ஆடிய சபை எது?
74) முப்புரங்களை எரித்த போது வெற்றிக்களிப்பில் ஆடிய தாண்டவம் எது?
75) சம்ஹார தாண்டவம் குறிக்கும் தொழில் எது?
76) திருவாலங்காடு ரத்தின சபையில் ஆடிய தாண்டவம் எது?
77) ஐந்தொழிலையும் விளக்கும் தாண்டவம் எது?
78) சிவபெருமானின் ஊன்றிய திருவடி குறிக்கும் தொழில் எது?
79) சிலப்பதிகார நூல் எழுதிய காலம் எது?
80) சிலப்பதிகாரம் கூறும் ஆடல்வகை எத்தனை?
81) இறைவன் திரிபுரத்தை சிரிப்பாலேயே எரித்து வெற்றிக்களிப்பில் ஆடிய ஆடல் எது?
82) கிருஷ்ணன் கம்சனின் கொம்பு ஒடித்து ஆடிய ஆடல் எது?
83) குடைக் கூத்தை ஆடியவர் யார் ?
84) ஆண்மைத்தன்மை திரிந்து பெண்மைக் கோலத்தோடு காமன் ஆடிய கூத்து எது?
85) மரக்கால் கூத்து ஆடியவர் யார் ?
86) பாவைக் கூத்தை ஆடிய கடவுள் யார் ?
87) வழுவூர் ராமையாப்பிள்ளை அவர்கள் வாழ்ந்த காலப்பகுதி எது?
88) இராமையப்பிள்ளையின் பிறந்த இடம் எது?
89) இராமையப்பிள்ளையவர்கள் நாட்டியக் கலையை யாரிடம் பயிலத் தொடங்கினார் ?
90) இப்பெரியார் மயிலாப்பூரில் வழுவூர் நுண்கலை மன்றத்தை எப்போது நிறுவினார் ?
91) தியாகராஜ சுவாமியின் பஞ்சரத்தின கீர்த்தனைக்கு முதன்முதலில் நடனம் அமைத்தவர் யார் ?
92) வழுவூர் இராமையாப்பிள்ளை எழுதிய நாட்டிய நூல் எது?
93) வழுவூர் இராமையாப்பிள்ளைக்கு வழங்கிய பட்டங்கள் எவை?
94) இராமையாப்பிள்ளை அவர்களின் நாட்டிய பாணி எது?
95) வழுவூர் இராமையாப்பிள்ளை அவர்கள் இறைவனடி சேர்ந்தது எப்போது?

## விடைகள்

1)வாத்ஸல்யபாவம் 2)பக்தி பாவம்
3)பயம்
4)சர்பசீஸம்
5)மின்னல்
6)கத்தரீமுகம்
7)சுனாமி
8)பதாகம்
9)9
10)ஜதீஸ்வரம்
11)ஸ்வரபல்லவி, ஸ்வரக் கோர்வை
12)நிருத்தம்
13)ஆரபி / சாவேரி
14)ஆரபி-ஆதி , சாவேரி-ரூபகம்
15)ஜதீஸ்வரம்

16)மகுடஅடவு
17)ததிங்கிணதொம், கிடதக தரிகிட தொம்
18)ஜதீஸ்வரம்
19)ஆரம்பத்திலும் நடுவிலும் இறுதியிலும்
20)நிருத்தம், நிருத்தியம், நாட்டியம்
21)அலாரிப்பு, ஜதீஸ்வரம், தில்லானா
22)அலாரிப்பு
23)மலர்வது
24)கடவுள், குரு, சபை
25)நாட்டை ராகம், திஸ்ர ஏகதாளம்
26)சுந்தரி – கழுத்தசைவு
27)இறுதியில்
28)1 வது அடவு
29)ஜதீஸ்வரம்
30)பல்லவி, அனுபல்லவி, சரணம்
31)சுவாதித்திருநாள் மகாராஜா, பொன்னையாப்பிள்ளை
32)சப்தம்
33)தாளம்-மிஸ்ர சாபு
ராகம்-இராகமாளிகை
34)தெய்வங்கள் மீதும், அரசர்கள் மீதும்
35)சிருங்காரம், பக்தி
36)வர்ணம்
37)பதவர்ணம்
38)பூர்வாங்கம், உத்தராங்கம்
39)பூர்வாங்கம்
40)உத்தராங்கம்
41)சௌக்க வர்ணம், ஆடல் வர்ணம்
42)பதம்
43)சிருங்கார ரஸம்
44)பல்லவி, அனுபல்லவி, சரணம்
45)கிருஷ்ணன்
46)முருகன்
47)தில்லானா
48)தில்லானா
49)விருத்தம்
50)பத்யம்
51)தோடயமங்களம்
52)கீர்த்தனை
53)பக்தி நிரம்பியதாகவும் புராண நிகழ்வு பற்றியதாகவும் இருக்கும்
54)கீதகோவிந்தம்
55)அஷ்டபதி
56)இது எட்டுப் பந்திகளை அல்லது கண்டிகைகளை கொண்டதனால்
57)கிருஷ்ணன், ராதையின் சிருங்கார லீலைகளை
58) அஷ்டபதி
59)ஜாவளி
60)பதம், ஜாவளி
61)நந்திகேஸ்வரர்
62)கௌத்துவம்
63)நவசந்தி கௌத்துவம்
64)சபாவந்தனம்
65)கம்பீரநாட்டை
66)கௌத்துவம், மல்லாரி
67)தண்டு
68)108
69)லாஸ்யம்
70)தாண்டவம்
71)முனிதாண்டவம்
72)திருப்புத்தூர்
73)வெள்ளியம்பலராஜிதசபை
74)திரிபுரதாண்டவம்
75)அழித்தல்
76)ஊர்த்துவ தாண்டவம்
77)ஆனந்த தாண்டவம்
78)மறைத்தல்
79)சங்கம்மருவிய காலம்
80)11 வகை
81)கொடுகொட்டி
82)அல்லியம்
83)முருகன்
84)பேடிக் கூத்து
85)துர்க்கை
86)திருமகள்
87)1905 – 1991
88)தென்னிந்தியாவின் கிழக்கு கரையோரமான வழுவூர் கிராமத்தில்
89)தனது தாய்மாமனான மாணிக்கப்பிள்ளையிடம்
90)1938 ல்
91)வழுவூர் இராமையாப்பிள்ளை
92)தெய்வீக ஆடற்கலை
93)நாட்டிய கலாகேசரி, இசைபேரறிஞர், கலைமணி, நாட்டியற் செல்வம், பத்மஸ்ரீ
94)வழுவூர் பாணி
95)1991 ம் ஆண்டு அவரது 86 வது வயதில்